நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.74/2018

**2021ம் ஆண்டு டிசம்பர்** திங்கள் 13ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | அபிஷேக் | வயது: | 23 |
| த/பெ.(அ)க.பெ | ஆனந்தன் | தொழில்: | கல்லூாி மாணவர் |
| ஊர் : | பெருமபட்டு | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் பெருமாபட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லூாியில் படித்து வருகிறேன். எனது அக்காவின் பெயர் ஜீவஸ்ரீ. ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர். 1ம் எதிரி பெயர் பாஸ்கர். 2ம் எதிரி பெயர் அரவிந்தன். எனது அக்காவிற்கும், 2ம் எதிரிக்கும், 2016 ஆண்டு திருமணம் நடைபெற்றது. 1ம் எதிரி 2ம் எதிரியின் அப்பா. எனது அக்காவிற்கும், 2வது எதிரிக்கும் திருமணத்திற்கு சிறு சிறு பிரச்சினை இருந்து வந்தது. இரண்டு வருடம் கழித்து என் அக்கா திருப்பத்தூர் நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு மனு தாக்கல் செய்தார். நீதிமன்றத்தால் எனது அக்காவிற்கு விவாகரத்து வழங்கப்பட்டது. 16.03.2018ந் தேதி நீதிமன்றத்தால் விவாகரத்து வழங்கப்பட்டது அப்போது நீதிமன்றத்திற்கு வெளியே வைத்து 1 மற்றும் 2 எதிரிகள் மற்றும் 2வது எதிரியின் தாயார் அவர்களுடன் இருந்தவர்கள் சேர்ந்து வாங்கடா உங்களை ஊரில் வைத்து பார்த்து கொள்கிறோம் என்று சொல்லி சென்றனர். பின்னர் நாங்கள் எங்களது வீட்டிற்கு சென்று திருமணத்தோடு தொடர்புடைய பழைய பொருட்களை வீட்டிற்கு முன்பு எரித்து கொண்டிருந்தோம். அப்போது மதியம் 2 லிருந்து 3 மணி இருக்கும், 1, 2, எதிரிகள் பூங்காவனம், ஹரி, ராணி, மொத்தமாக 10 லிருந்து 15 நபர்கள் வந்திருப்பார்கள். வந்தவர்கள் ஏன் எங்களது பொருட்களை எறிக்கீறிர்கள் என்று கேட்டுக்கொண்டே எதிரிகள் 1 2, 3, 4 மற்றும் 3ம் எதிரியின் ஹரியின் அம்மா ஆகியோர் எங்களை கல்லாலாலும், கைகளாலும் தாக்கினார்கள். அரவிந்தன் கல்லால் என்னுடைய தலையில் தாக்கினார். என்னுடைய தலையிலிருந்து ரத்தம் வந்தது. அதன்பிறகு சிகிச்சைக்காக எனது அப்பா என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது காவல்துறையினரிடம் நான் புகார் வாக்குமூலம் அளித்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆகும்.தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். தற்போது என் முன் காட்டப்படும் கருப்பு கலர் கொண்ட ஜியோ செல்போன் என்னுடையது தான் அது சா.பொ.1 ஆகும். என்னை அடிக்க உபயோகப்படுத்திய கல்லை என்னால் அடையாளம் காண்பிக்க இயலாது. கல்லால் என்னை பின்னால் இருந்து தாக்கியதால் எனக்கு தெரியாது. என் முன்காட்டப்படும் கொம்பு தான் என்னை அடிக்க பயன்படுத்தியது ஆகும். அது சா.பொ. 2 ஆகும். நடந்த சம்பவம் குறித்து போலீஸார் சம்பவம் நடந்து ஒருநாள் கழித்து தான் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:-

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.